# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 063/2016

ஆணை எண்: 123 /2016

நாள்: 13 /07 /2016

திரு.S.நடனசபாபதி,
S/O.(Late) சுப்பையன்,
நேருவீதி, ஆலாங்காட்டு வலசு,
மொடக்குறிச்சி –638104. ஈரோடு மாவட்டம். — **மனுதாரர்**

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
மொடக்குறிச்சி –638104. ஈரோடு மாவட்டம். — **எதிர் மனுதாரர்**

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி திரு.நடனசபாபதி, அவர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டு மனு 063/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இம்முறையீடு தொடர்பாக உரிய விசாரணைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

## ஆணை

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி திரு.நடனசபாபதி என்பாரின் முறையீட்டு மனுவில், ஈரோடு மாவட்டம் , மொடக்குறிச்சி பேரூராட்சி, வார்டு எண்,9 ஆலாங்காட்டுவலசில் INFRA CAP FILLING SCHEME 2015–ன் படி தமிழக அரசால் ரூ.40,00,000/– ஒதுக்கீடு செய்து இந்த பணியை சந்திரசேகரன் அன்கோ பாசூர் அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியை அவர் செய்யாமல் சப் கான்டிராக்ட் விடப்பட்டு அதனை எம்.வேலம்பாளையத்தை சார்ந்த ஆர்.தங்கவேல் மகன் டி.பூபதி என்பவருக்கு காண்டிராக்ட் விட்டிருந்தார். மேலும், முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

1. சாக்கடைப்பணிகள் வேலை செய்யப்பட்ட இடம், முறையாக வட்டாட்சியர் மூலமாக சர்வே செய்யப்பட்டதா? அதனுடைய ஆவணங்களும் தேவை, சர்வே செய்யப்பட்ட படி ஆக்கிரமிப்புகளை அகற்றி வேலை துவங்கப்பட்டதா? அதற்கான ஆவண நகல்களும் தேவை.

2. சாக்கடைப்பணிகள் செய்யும்போது இருபுறமும் வைக்கப்பட்டுள்ள கான்கிரீட் சுவர் மதிப்பீட்டு அறிக்கையின் படி கலவைகள் கலக்கப்படவில்லை. அதில் போடப்பட்டுள்ள ஜல்லிகளின் தரம் குறைவாகவும் ¾ ஜல்லி போடுவதற்கு பதிலாக் 1 1/2 ஜல்லி கலக்கப்பட்டு தரம் கெட்ட மணலுடன் போடப்பட்டுள்ளது. இதனை ஆய்வுக்கு கொண்டு சென்று அதன் ஆய்வறிக்கையையும் பேரூராட்சி மதிப்பீட்டு அறிக்கையும் எங்களுக்கு அளிக்க வேண்டும்.

3. மேற்படி சாக்கடைப்பணிகள் செய்யப்பட்ட இடத்தில் 2 பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதில் போடப்பட்டுள்ள கம்பிகள் தரமானதா? மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள அளவுப்படி போடப்பட்டுள்ளதா? என்பதனை ஆய்வு செய்து எங்களுக்கு வழங்க வேண்டும்.

4. மேற்படி சாக்கடைப்பணிகள் செய்யப்பட்ட இடத்தில் ஆலாங்காட்டு வலசு ஊரின் தெற்கு கடைசி பகுதிகளில் பணிகள் செய்ய ஆரம்பித்து விட்டு சுமார் 10 மீட்டர் நீளஅளவுக்கு பக்கவாட்டு சுவர், நிலமட்டம் போடப்படாமல் உள்ளது. அதனை உடனடியாக போடப்பட வேண்டும். அந்த இடத்திற்கு அருகில் ஏற்கனவே போடப்பட்ட கான்கிரீட் ரோட்டை இடித்து ஆழப்படுத்தி வாய்க்கால் பிடிக்கப்பட்டிருப்பதை அதனை நல்லமுறையில் மூடி ஏற்கனவே இருந்தவாறு கான்கிரீட் தளம் அமைத்து தர வேண்டும்.

5. சாக்கடைப்பணிகள் செய்யப்பட்ட நிலமட்டத்தில் முறையாக தரைதளம் அமைக்கப்படவில்லை. சரியான சாய்வுதளம் அமைக்காமல் போடப் பட்டுள்ளதால் தண்ணீர் தேங்கி துர்நாற்றமும் பெரும் கொசுத்தொல்லையும் உண்டாகி பொதுமக்களுக்கு வியாதி உண்டாகும் சூழ்நிலை ஏற்படும். எனவே தரைதளத்தை சாய்வுதளமாக அமைத்து தர வேண்டும்.

6. இரு இடங்களில் போடப்பட்ட பாலங்களில் இருபுறங்களிலும் அனைத்து வாகனங்களும் செல்லுமாறு நல்ல மண்களை கொண்டு வழித்தடம் அமைத்து தர வேண்டும்.

7. சாக்கடைப்பணிகள் இருபக்க கான்கிரீட் சுவர்கள் சரியான முறையில் சிமெண்ட் போட்டு பூசப்படவில்லை. ஆங்காங்கே சுவரில் வெறும் ஜல்லிகளே தெரிகின்றன. அதனை சரிபடுத்த வேண்டும்

8. மேற்படி சாக்கடைநீர் தற்போது புகழ்பெற்ற சிவன் கோயில் தெப்பக்குளத்தில் கொண்டு சென்று விடப்பட்டுள்ளது. அதனை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

9. சாக்கடைப்பணி செய்த இடத்தின் பக்கவாட்டு சுவற்றின் ஓரம் குண்டும் குழியுமாக உள்ளது. அதற்கு உரியபடி மண்கொட்டி சரி செய்து தரப்பட வேண்டும்.

மேலும், இவ்வளவு பணிகளில் குறைபாடுகள் இருப்பதை இதுவரை எந்தவொரு அதிகாரியும் கண்டுகொள்ளவில்லை. இது சம்பந்தமாக நாங்கள் மொடக்குறிச்சி பேரூராட்சியில் சொல்லியும் யாரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் வேலை சுமார் 40 சதவீதம் முடியும் சூழ்நிலையிலேயே ஒப்பந்ததாரருக்கு ரூ.24,00,000/– கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகள் மற்றும் எங்களது குறைகளை நிவர்த்தி செய்யாமல் எவ்வித நிதியை வழங்கக்கூடாது எனவும் உடனடியாக இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமாயும் தெரிவித்துள்ளார்.

மேற்படி புகார் குறித்து மொடக்குறிச்சி செயல் அலுவலரிடம் தற்காப்பு அறிக்கை கோரப்பட்டது. தனது 24.03.2016 நாளிட்ட பதிலறிக்கையில் செயல் அலுவலரால் கீழ்க்கண்டவாறு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

| மனுதாரர் கோரிக்கை எண் | **செயல் அலுவலர் அறிக்கையில் உள்ள விபரம்** |
|---|---|
| 1 | வார்டு எண். 9 ஆலாங்காட்டு வலசில் வடிகால் அமைக்கும் இடம் முறையாக சர்வே செய்யப்பட்டு பணி துவங்கப்பட்டு, முடிவுற்றது. (சலான் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது). |
| 2 | இப்பணியினை பேரூராட்சி உதவிப்பொறியாளர் முன்னிலையில், உதவி செயற்பொறியாளர் அவர்களின் மேற்பார்வையிலும் நடைபெற்றது. உரிய மதிப்பீடுகளுக்குட்பட்டு வேலை நடைபெற்றது. |
| 3 | இப்பணியினை பேரூராட்சி உதவிப்பொறியாளர் முன்னிலையில், உதவி செயற்பொறியாளர் அவர்களின் மேற்பார்வையிலும் நடைபெற்றது. தரமான கம்பிகள் பயன்படுத்தப்பட்டு வேலை நடைபெற்றது. இவை தொடர்பாக தரச்சான்று பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. |
| 4 | உதவிப்பொறியாளர் அவர்களால் மேற்படி இடம் ஆய்வு செய்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற ஒப்புதல் பெற்ற பின்னர் இப்பணி மேற்கொள்ளப்படும். |
| 5 | இப்புகார் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. தற்போது இப்பகுதியில் தண்ணீர் தேங்காமல் வழிந்தோடி செல்கிறது. எனவே இப்பகுதியில் சாய்வுதளம் அமைக்க வேண்டிய அவசியமில்லை. (போட்டோ நகல் இணைக்கப்பட்டுள்ளது). |
| 6 | தற்போது மண் கொட்டப்பட்டு போக்குவரத்துக்கு இடையூறின்றி அனைத்து வாகனங்களும் செல்லத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளது. |
| 7 | தற்பொழுது ஜல்லிகள் தெரியாத வகையில் பூச்சுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (போட்டோ நகல் இணைக்கப்பட்டுள்ளது). |
| 8 | புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு சாக்கடை நீர் தெப்பக்குளத்தில் செல்லவில்லை. இது முற்றிலும் தவறான தகவலாகும் |
| 9 | பணி நிறைவு செய்யப்படும் முன்னரே இப்புகார் தெரிவிக்கப்பட்டது. தற்போது இப்பணி முடிக்கப்பட்டு சாலைகள் அனைத்தும் மண் கொட்டி சரி செய்யப்பட்டுள்ளது. |

வார்டு எண்.9, ஆலாங்காட்டுவலசில் வடிகால் அமைக்கும் பணிக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு பகுதி பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. உதவிப்பொறியாளர் அவர்களால் பட்டியல் தயார் செய்யப்பட்டு, உதவி செயற்பொறியாளரிடம் மேலொப்பம் பெற்ற பின்னர்தான் தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனு தொடர்பான விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு மனுதாரர் அழைக்கப்பட்டார். எனினும் மனுதாரர் நேரடி விசாரணைக்கு ஆஜராகாமல் தனது 23.05.2016 நாளிட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதை நேரடி வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளார். அவரது 23.05.2016 நாளிட்ட மனுவும் மிக விரிவாக பரிசீலிக்கப்பட்டது

இம்முறை மன்ற அழைப்பாணை எண்.063/2016/பேரூராட்சி நாள்.21.04.2016–ன்படி மொடக்குறிச்சி செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் திருமதி. S.டார்த்தி ஆஜராகி அளித்த வாக்குமூலம் பின்வருமாறு

1. முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் குறித்த 03.07.2015 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்ற அவசர கூட்டத்தில் பொருள் எண்.1 ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் வார்டு 9 ஆலாங்காட்டு வலசில் வடிகால் அமைக்க 4.90 சதவீதம் டெண்டர் பெறப்பட்டு ஒப்பந்ததாரர் கே.சந்திரசேகரன் என்வருக்கு மேற்படி பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் உரிய அரசு விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுள்ளது.( Work Order, Tender Notice, Bullettine Copy Enclosed)

2. மனுதாரருக்கு உரிய பதில் அறிக்கை பேரூராட்சி மூலம் 24.03.2016 தேதி வழங்கப்பட்டுள்ளது. (அதன் நகல் சமர்ப்பிக்கப்பட்டது)

3. ஒப்பந்ததாரருக்கு வடிகால் பணியினை நல்ல முறையில் செய்யவும் தரமான பொருள்கள் சிமெண்ட், கான்கிரீட் கம்பிகள் போன்றவை தர சான்றுகள் பெற்று வேலைகள் செய்யுமாறு பணி ஆணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. வேலையானது தமிழக அரசின் உள்கட்டமைப்பு நிதியில் சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய விளம்பரங்கள் செய்யப்பட்டு (District, State Bullettine) பொறியாளர்களால் உரிய மதிப்பீடுகள் பெறப்பட்டு வடிகால் பணி வேலை நடைபெறும் போது உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி இயக்குநர் ஆகியோரால் மேல் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் தனது வாக்குமூலத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு எனது பதிலை சமர்ப்பித்துக்கொள்கிறேன் என கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"1. மேற்படி வேலைக்கு முதலில் டெண்டர் கோர எந்த ஒப்பந்ததாரரும் முன் வரவில்லை. காரணம் விலை புள்ளியானது சந்தை விலையை விட குறைவாக இருந்ததால் யாரும் வரவில்லை. மீண்டும் டெண்டர் ஆனது விலை புள்ளியை விட கூடுதலாக 5 சதவீதம் விலை புள்ளி நிர்ணயம் செய்து டெண்டர் போடப்பட்டுள்ளது. இதற்கு பேரூராட்சி தனது தீர்மான எண்.234/2015 மூலம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2. வருவாய் அலுவலர் மூலம் புறம்போக்கு இடத்தினை சர்வே செய்து அத்து கணக்கீடு செய்யப்பட்டு வடிகால் பணி செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலான் நகல் (Chellan copy Enclosed) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் உண்மைக்கு புறம்பான தகவலை தெரிவித்துள்ளார்.

3. மேற்படி வேலைக்கு சேலம் தொழில் வணிக துறை மண்டல சோதனை ஆய்வுக்கூடத்தில் டெஸ்ட் சர்டிபிகேட் (Test Certificate Enclosed) பெறப்பட்டு வேலை நடைபெற்றது.

4. மேற்படி வேலைக்கு 50 சதவீத பணி முடிவுற்ற நிலையில் தான் ஒப்பந்ததாரருக்கு பார்ட் பில் தொகை வழங்கப்பட்டது. பார்ட் பில் தொகை ரூ.**24,57,298/-** யை BPV No. **330/2015-16** நாள்.**16.10.2015** காசோலை மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. பொறியாளர்களின் பில் பட்டியலில் மேலொப்பம் பெறப்பட்ட பின்னர் தான் ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் கூறுவது போல் இதில் எந்தவிதமான அவசரகதியில் தொகை வழங்கப்படவில்லை.

5. வடிகால் பணி முடிவுற்ற பின்பு தான் சுவர் ஓரங்களில் பூச்சும் வடிகாலினை ஒட்டி மண்கொட்டியும் முழுமையான வேலை நடந்து முடிந்துள்ளது. (போட்டோ நகல் சமர்ப்பித்தார்.)

6. பழைய வடிகாலில் எடுக்கப்பட்ட கற்கள் , மண் போன்றவை மிகவும் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்ததாலும், பழுதடைந்து இருந்ததாலும் இதனை ஏலம் கூற இயலவில்லை.

முறையீட்டு மனுதாரர் திரு.நடனசபாபதி, அவர்கள் புகார் தெரிவிக்கும் காலகட்டத்தில் மொடக்குறிச்சி பேரூராட்சியில் வசிக்கவில்லை. தற்பொழுதும் அவர் ஊரில் இல்லை, அவர் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறார். தனது சுய லாபத்திற்காகவும் பேரூராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் பொருட்டும் வேண்டுமென்றே இம்மாதிரியான புகாரை அவர் அளித்துள்ளார். மனுதாரர் மற்றவர்களின் லாப நோக்கத்திற்காக இம்மனுவினை அளித்துள்ளார். அவர் கூறியுள்ள கருத்துக்கள் ஆவணங்களின் அடிப்படையில் உண்மைக்கு புறம்பானது. மேற்படி வடிகால் பணி நல்ல தரமான பொருட்களால் தரத்துடன் செய்யப்பட்டுள்ளது, இவ்வடிகால் பணி குறித்து வேறு எவரும் எவ்வித புகாரும் தெரிவிக்கவில்லை என்பதை முறைமன்றத்தின் மேலான கவனத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கிறேன்" என வாக்குமூலம் அளித்தார்.

பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் முறையீடு மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகார்கள் குறித்து அறிக்கை மற்றும் ஆவணங்ளை ஆய்வு செய்ததில் கீழ்கண்ட விவரங்கள் அறியப்பட்டது.

மொடக்குறிச்சி பேரூராட்சி வடிகால் பணி மேற்கொள்வதற்காக ஒப்பந்த விலைப்புள்ளியானது சந்தை விலையை விட குறைவாக இருந்ததால் ஒப்பந்தம் கோர எந்த ஒப்பந்ததாரரும் முன் வரவில்லை. மீண்டும் ஒப்பந்த விலைப்புள்ளியைவிட கூடுதலாக 5

சதவீதம் விலைப்புள்ளி நிர்ணயம் செய்து மன்ற தீர்மான எண்,234/2015–ன் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டதாக கண்டறியப்பட்டது.

வடிகால் பணி மேற்கொள்வதற்கு வருவாய் அலுவலர் மூலம் புறம்போக்கு இடத்தினை சர்வே செய்து அத்து கணக்கீடு செய்யப்பட்டு அதற்குரிய செலான் தொகை செலுத்தப்பட்டு வடிகால் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என கண்டறியப்பட்டது.

வடிகால் பணி வேலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் (சிமெண்ட், கம்பி,மணல்) தரம் குறித்து சேலம் தொழில் வணிகத்துறை மண்டல சோதனை ஆய்வுக் கூடத்தில் Test Certificate பெறப்பட்டது என்று கண்டறியப்பட்டது.

இந்த வடிகால் பணி வேலைக்கு 50 சதவீத பணி முடிவுற்ற நிலையில் தான் ஒப்பந்ததாரருக்கு பில் தொகையின் ஒரு பகுதி ரூ.24,57,298/– காசோலை மூலம் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது என அறியப்பட்டது. மேலும், பட்டியலில் பொறியாளர்களை மேலொப்பம் பெறப்பட்ட பின்னர்தான் ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்கப்பட்டதையும் அறிய முடிகின்றது.

வடிகால் பணி முடிவுற்ற பின்புதான் சுவர் ஓரங்களில் பூச்சும், வடிகாலினை ஒட்டி மண் கொட்டியும் முழுமையான வேலை நடந்து முடிந்துள்ளது என அறிய முடிகின்றது. அவ்வாறு வடிகாலில் எடுக்கப்பட்ட கற்கள், மண் போன்றவை பயன்படுத்த முடியாத நிலையில் இருந்ததால் ஏலம் கூற இயலவில்லை என்பதை செயல் அலுவலரின் வாக்குமூலத்தில் அறியமுடிகிறது.

மேலும், செயல் அலுவலர் தனது 21.06.2016 நாளிட்ட வாக்குமூலத்தில் மனுதாரர் சுயலாபத்திற்காக திருப்பூரில் வசித்துக் கொண்டு பேரூராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் பொருட்டு மனுதாரர் மற்றவர்களின் லாப நோக்கத்திற்காக அவர் கூறியுள்ள கருத்துக்கள் ஆவணங்களின் அடிப்படையில் உண்மைக்கு புறம்பானது எனவும், தரமான பொருட்களால் இவ்வடிகால் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். எனவே மனுதாரரின் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள அனைத்து குற்றச்சாட்டுகளும் ஆதாரமற்ற ஒன்று என செயல் அலுவலர் மறுத்துள்ளார்.

மனுதாரர் முறையீட்டு மனு, நேரில் ஆஜராகாது பதில் அனுப்பிய மனு, செயல் அலுவலர் வாக்குமூலம், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் வேறொரு இடத்தில் வசிப்பிடமாக இருந்துக் கொண்டு இப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வடிகால் பணி குறித்து மற்றவர்களின் லாபத்திற்காக புகார் கூறப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளித்திட போதிய சந்தர்ப்பம் அளித்தும் நேரில் ஆஜராகாது மேலும் ஒரு மனுவை தனது வாக்குமூலமாக கருதுமாறு குறிப்பிட்டு அனுப்பியுள்ளார். குற்றச்சாட்டுகட்கு எவ்வித அடிப்படை ஆதாரங்களையும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை. மேலும், வடிகால் பணி அறிவிப்பு செய்யப்பட்டு உரிய ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, விதிமுறைகளின் அடிப்படையில்,

பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கான ஆவணம், வடிகால் பணிக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களுக்கு பெறப்பட்டுள்ளதற்கான தரசான்று ஆவணம், பணி நடைபெற்ற இடத்தில் எடுக்கப்பட்டுள்ள போட்டோ நகல் ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரின் முறையீடு ஆதாரமற்ற குற்றச்சாட்டு என இம்முறைமன்ற நடுவம் தீர்மானித்து முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடுகிறது.

**2016–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 13–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு** அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

<u>பெறுநர்:</u>

1. திரு.S.நடனசபாபதி,
S/O.(Late) சுப்பையன்,
நேருவீதி, ஆலாங்காட்டு வலசு,
மொடக்குறிச்சி –638104. ஈரோடு மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
மொடக்குறிச்சி –638104. ஈரோடு மாவட்டம்.